**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 34 of 2023

Deposition of D.W. 1

Name of the Witness: திருமதி.சாரதா

Date : 06.04.2026

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

12) வா.சா.ஆ.10 காந்தியின் இறப்பு சான்றிதழ் ஆகும். காந்தியின் இறப்பு சான்றிதழ் மருக்காலம்பட்டி கிராமம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. எனது மற்றும் எனது மகளின் விலாசம் கள்ளியூர் கிராமம். வா.சா.ஆ.6 காந்தியின் குடும்ப அட்டையில் விலாசம் மருக்காலம்பட்டி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 குடும்ப அட்டை 2016ல் வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

13) 2 முதல் 4 வாதிகளின் பிறப்பு சான்றிதழ் மருக்காலம்பட்டி கிராமம் என்று தான் பதிவாகியுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.11 காந்தியின் ஆதார் அட்டை என்றால் சரிதான். வா.சா.ஆ.11லிலும் மருக்காலம்பட்டி கிராமம் என்று தான் பதிவாகியுள்ளது என்றால் எங்கள் ஊரிலிருந்து 300மீட்டர் தூரத்தில் தான் உள்ளது. கள்ளியூருக்கும் மருக்காலம்பட்டிக்கும் ஆலாபுரம் தான் அஞ்சல். வா.சா.ஆ.12 வங்கி பாஸ்புக்கில் உள்ள புகைப்படம் யாருடையது என்று எனக்கு தெரியாது. சென்ரல் கோஆப்ரடிவ் வங்கியில் காந்தி கணக்கு வைத்திருந்தார் என்றால் சரிதான். காந்தி பிறந்தது, வளர்ந்தது, இறந்தது எல்லாம் மருக்காலம்பட்டி என்றால் சரிதான்.

*14)* வாதிகள் *4* பேரும் காந்தியுடனே மருக்காலம்பட்டியில் வாழ்ந்து வந்ததால் தான் அவர்களுடைய ஆதார் கார்டு, ரேசன்கார்டு எல்லாம் மருக்காலம்பட்டி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. *1*ம் வாதியும், இறந்து போன காந்தியின் சட்டபடியான மனைவி என்பதால் தான் அவருடைய அனைத்து ஆவணங்களிலும் மருக்காலம்பட்டி விலாசம் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. *2* முதல் *4* வாதிகள் வாதிக்கும், காந்திக்கும் பிறந்தவர்கள் என்பதால் தான் அவரின் ஆதார் கார்டு, பிறப்பு சான்று, பள்ளி ஆவணங்கள் அனைத்திலும் காந்தியின் பெயரும், மருக்காலம்பட்டி விலாசமும் பதிவாகியுள்ளது என்றால் எனக்கு தெரியாது.

*15)* நான் இ சேலை மையம் வைத்து நடத்தி வருவதால் நான் வழக்கிற்காக அனைத்து ஆவணங்களையும் தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் ஒப்படைத்துள்ள ஆவணங்கள் எதுவும் நான் காந்தியின் மனைவி என்பதற்கு எந்த ஆவணமும் குறிப்பாக இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் காந்தியின் வாரிசுகள் என்ற அடிப்படையில் வேலையில் அவரது பணி பலன்களை பெற கூடாது என்பதற்காக சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையில் மனு கொடுத்து தடுத்து விட்டோம் என்றால் சரியல்ல.

*16)* நான் சொல்வது போல் என்னுடன் காந்தி வாழ்ந்திருந்தால் அனைத்து ஆவணங்களும் கள்ளியூர் கிராமம் என்று பதிவாகியிருக்கும் என்றால் சரியல்ல. மகளின் பாதி ஆவணங்கள் மருக்காலம்பட்டியில் தான் பதிவாகியுள்ளது. *1*ம் வாதி காந்தியின் சட்டப்படியான வாரிசு என்பதால் தான் *1*ம் வாதி சுமதியை

அவரது சட்டபடியான மனைவி என்றும், காந்தி அவரது பணி பதிவேட்டில் பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. அதில் உள்ள எனது கணவரின் கையெழுத்து அல்ல. EX.X2 காந்தியின் பணி பதிவேட்டில் உள்ள புகைபடம் காந்தியின் புகைபடமா என்றால் அது யாருடையது என்று எனக்கு தெரியாது. அதிலுள்ள புகைபடம், கையெழுத்து காந்தியுடையது என்றும், அதை வழக்கிற்காக தெரியாது என்று மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

*17)* நான் உண்மையை மறைத்து தவறான ஆவணங்களை ஜோடினை செய்து வழக்கை தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் காந்திக்கும் திருமணம் நடந்ததாக சொல்வது பொய் என்றாலும், அதனால் தான் திருமண தேதியை கூட வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண் *34/2023* வாதிகளும், *1*ம் பிரதிவாதியின் சட்டபடியான வாரிசுகள் என்பதால் அவர்கள் போட்ட அசல் வழக்கு எண் *34/2023* வழக்கு அனுமதிக்கதக்கது என்றும், நானும் எனது மகளும் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் *101/2019* வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.